முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## AA2 பரீட்சை – 2018 யூலை

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

(Business management and strategy)

2018-07-22
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட நேரம்*** *: வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  (3) ***விடைகள்*** *உங்களுக்குத் தரப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படுதல் வேண்டும்.*
  (4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.*

**1.1** பின்வருபவர்களுள் இடைநிலை மட்ட (middle level) முகாமையாளர் ஒருவருக்கான ஓர் உதாரணமாக அமைபவர் யார்?

(1) பிரதம நிறைவேற்று அதிகாரி (2) கணக்குகள் நிறைவேற்றுநர்
(3) நிதி முகாமையாளர் (4) முகாமைப் பணிப்பாளர்

**1.2** வேலையில் மனித நடத்தைப் பகுதியினை (human dimension) விபரிக்கின்ற முகாமைத்துவக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) அதிகாரவியல் கோட்பாடு (2) நடத்தைசார் கோட்பாடு
(3) தரநீதியான கோட்பாடு (4) விஞ்ஞானரீதியான கோட்பாடு

**1.3** பின்வருவனவற்றுள் நிறுவன மீள்கட்டமைப்பிற்கான ஓர் அணுகுமுறையாக இருப்பது எது?

(1) அளவைக் குறைத்தல் (Downsizing) (2) மட்டங்களை நீக்குதல் (De-layering)
(3) குத்துமுறையாக்கல் (Virtualization) (4) மேற்குறிப்பிட்ட எல்லாம்.

**1.4** பின்வருவனவற்றுள் கட்டுப்படுத்தலின் வரையறை (limitation) ஒன்றாக **அமையாதது** எது?

(1) இது ஒரு செலவுமிக்க செயன்முறையாகும்.

(2) வெளிக் காரணிகள் மீது எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை.

(3) ஊழியர்களிடமிருந்தான ஏற்பனவு

(4) அளவுசார் நியமங்களை உருவாக்குவதில் சிக்கல்தன்மை

**1.5** பின்வருவனவற்றுள் கட்டுப்படுத்தல் செயன்முறையின் ஒரு பண்பியல்பு (characteristic) **அல்லாதது** எது?

(1) கட்டுப்படுத்தல் என்பது ஒரு தொடர்ச்சியான செயன்முறை ஆகும்.

(2) கட்டுப்படுத்தலானது திட்டமிடலுடன் தொடர்பில்லாதது ஆகும்.

(3) கட்டுப்படுத்தல் என்பது மாற்றமடைகின்ற ஒரு செயன்முறையாகும்.

(4) கட்டுப்படுத்தல் எதிர்காலத்தை நோக்கியதாகும்.

*வினா இல.**1.6** தொடக்கம் **1.10** வரையில் தரப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் கூறுக. உங்களது விடையினை (சரியானது / தவறானது) உங்களுக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி, அதன் எதிரே எழுதுக.*

**1.6** கண்காணிப்பாளராகத் தொழிற்படல், தகவல் பரப்புநராகத் தொழிற்படல் மற்றும் பேச்சாளராகத் தொழிற்படல் என்பன முகாமையாளர் ஒருவரின் நபர்சார்ந்த (interpersonal) வகிபாகங்கள் ஆகும்.

**1.7** ஒருமுகப்படுத்தல் (centralization) என்பது ஹென்றி பயோல் (Henry Fayol) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முகாமைத்துவக் கோட்பாடு ஆகும்.

**1.8** திட்டமிடலானது ஒன்றையொன்று தழுவிய செயற்பாடுகளை (overlapping activities) அதிகரிக்கிறது.

**1.9** தந்திரோபாயக் கட்டுப்பாடானது உள்ளக மூலங்களிலிருந்து (sources) மாத்திரமே தரவினை தேவைப்படுத்துகிறது.

**1.10** நிறுவனமொன்றின் அதிகாரம் (authority) மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லுகின்ற அதே நேரம் பொறுப்பானது (responsibility) கீழிருந்து மேல்நோக்கிச் செல்கிறது.

(ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

நிறுவனமொன்றின் வெற்றிகரமான முகாமையாளராக வருவதற்கான மிகவும் முக்கிய தேவைப்பாடுகளில் ஒன்று திறன்கள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

வெவ்வேறு முகாமைத்துவ மட்டங்களிலுள்ள முகாமையாளர்களால் விருத்தி செய்யப்பட வேண்டிய முகாமைத்துவத் திறன்கள் (managerial skills) மூன்றினை (03) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

நோக்கம் (objective) என்பது ஒரு நபர், ஒரு குழு அல்லது ஒரு நிறுவனம் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு குறித்த கால எல்லையினுள் அடைந்துகொள்ள எதிர்பார்க்கின்ற குறித்ததொரு விளைவு (result) ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியது :***

நோக்கம் ஒன்றின் பண்பியல்புகள் (characteristics) ஐந்தினைக் (05) **கூறுக.** (05 புள்ளிகள்)

## வினா 04

அதிகாரக் கையளிப்பு (delegation of authority) என்பது மேல்நிலை ஊழியர் ஒருவர் கீழ்நிலை ஊழியர் ஒருவருக்கு அல்லது பலருக்கு தீர்மானமெடுப்பதற்காக தனது சொந்த அதிகாரத்தின் ஒரு பகுதியை வழங்குகின்ற செயன்முறை ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியது :***

அதிகாரக் கையளிப்பின் அனுகூலங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

அடிப்படைத் தொடர்பாடல் மாதிரியில், ஊடகம் என்பது செய்தியை கொண்டுசெல்கின்ற மார்க்கமாகும்.

***நீங்கள் செய்யவேண்டியது :***

பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஒன்றிற்காக பொருத்தமானதொரு ஊடகத்தைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் ஐந்தினை (05) **அடையாளம் காண்க.** (05 புள்ளிகள்)

## வினா 06

கலாசார வலையானது கலாசார எடுகோள்கள் மற்றும் நடைமுறைகளை விளக்கி நிறுவனத்தின் ஒவ்வொரு கூறுகளையும் தந்திரோபாயத்துடன் இணைப்பதற்கு உதவிபுரிகின்றது.

***நீங்கள் செய்யவேண்டியது :***

கலாசார வலையின் பின்வரும் கூறுகளை (elements) **விபரிக்குக** :

(a) நிறுவனக் கட்டமைப்பு (Organizational Structure)

(b) கதைகள் (Stories) (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 07

**மல்தெனிய இன்டஸ்ரீஸ்** என்பது யப்பானியக் கம்பனிகளுக்கு விசேட வாகனப் பாதுகாப்பு முறைமைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்கின்ற வாகன உதிரிப்பாகக் கம்பனி ஒன்றாகும். துரித வளர்ச்சி காணும் கம்பனி ஒன்றாக, **மல்தெனிய இன்டஸ்ரீஸ்** ஆனது தற்போது மாற்றமடைந்து செல்கின்ற வியாபாரச் சூழலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு யப்பானிய முகாமைத்துவப் பாணியினைப் (Japanese Management Style) பின்பற்றுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பாரம்பரிய (மேற்கத்தைய) முகாமைத்துவப் பாணிக்கும் (style) யப்பானிய முகாமைத்துவப் பாணிக்கும் (style) இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் (02) **கூறுக.** (04 புள்ளிகள்)

(b) **மல்தெனிய இன்டஸ்ரீஸ்** முகங்கொடுக்கக்கூடிய சமகால முகாமைத்துவச் சவால்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 08

தந்திரோபாயமானது (strategic) இலக்கு ஒன்றினை உருவாக்கல் (formation) மற்றும் அந்த இலக்கினை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைத் திட்டங்களை அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. தந்திரோபாயத் தீர்மானங்களை மேற்கொள்வதறகாகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் கம்பனிகளால் பொதுவாகப் பின்பற்றப்படுகின்ற புத்திசாதுரியமான திட்டமிடல் மாதிரியானது (தந்திரோபாயத் திட்டமிடற் செயன்முறை) பல படிமுறைகளைக் (steps) கொண்டுள்ளது. தந்திரோபாய மாற்றுத் தெரிவினை உருவாக்குதல் (strategic option generation) என்பது புத்திசாதுரியமான திட்டமிடல் மாதிரியில் (rational planning model) உள்ளடங்கியுள்ள ஒரு படிமுறை ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நிறுவனம் ஒன்றிற்கு தந்திரோபாயத்தின் முக்கியத்துவத்தை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) தந்திரோபாய மாற்றுத் தெரிவினை உருவாக்குவதில் அன்சொப் கட்டமைப்பில் (Ansoff matrix) உள்ளடங்கியுள்ள பின்வரும் இரண்டு தந்திரோபாய மாற்றீடுகளை (strategic alternatives) **விபரிக்குக** :

   (i) பொருள் மேம்பாடு (Product development)

   (ii) பன்முகப்படுத்தல் (Diversification) (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**வினா 09**

மாற்ற முகாமைத்துவமானது (change management) சந்தைக் கேள்வியை எதிர்கொள்வதற்காக மாற்றத்தை விரைவாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலம் போட்டி நன்மையை வழங்குகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வெற்றிகரமான மாற்றம் ஒன்றிற்கான காரணிகள் (parameters) மூன்றினை (03) **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(b) (i) நிறுவனமொன்றின் இரண்டு (02) உள்ளக நாட்டதாரர்களை (stakeholders) **இனங்காண்க.**

(02 புள்ளிகள்)

(ii) நிறுவனச் செயற்பாடுகளில் அவர்களின் செல்வாக்குகளை (influences) **விபரிக்குக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

**வினா 10**

**பிரியந்த ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்** என்பது ஆடைத்தொழிற்சாலை, தேயிலை, ஹோட்டல் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்ற பல கைத்தொழில் துறைகளை இயக்குகின்ற நன்கு நிறுவப்பட்ட ஒரு கம்பனியாகும். 1983 இல் அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, அதன் தாபகராகவுள்ள திரு.**பிரியந்த குணசேகர** கம்பனி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார். திரு. **பிரியந்த** நிறுவனத்திலுள்ளோருடன் மிகவும் நட்புறவுடன் பழகுவதைப் பின்பற்றுகிறார். அவர் தனது நிறுவனத்தினுள் அமைதியான வேலைச் சூழல் ஒன்றை உருவாக்குகின்ற பலமான நோக்கத்தைக் கொண்டிருக்கிறார். வழமையாக அவர் வேலைத்தளத்தைச் சுற்றிப் பார்வையிடுவதுடன் ஊழியர்களுடன் உரையாடல்களிலும் ஈடுபடுகிறார். தனிநபர் மரியாதை, நேர்மை, மற்றவர் மனமறிந்து செயற்படல், சமத்துவம் மற்றும் கடின வேலை போன்ற கம்பனியின் பெறுமதிகள் நீண்ட காலத்திற்கும் மேலாக திரு. **பிரியந்தவிலிருந்து** பெறப்பட்டவையாகும். மேலும், அவர் வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றும் ஊழியர்கள் தங்களது சமய அனுட்டானங்களை மேற்கொள்ளச் சில இடங்களை ஏற்படுத்துவதற்கும் தீர்மானித்திருந்தார். ஊழியர்கள் ஒற்றுமையாகவும் ஒன்றாகவும் இருப்பதற்கான ஊக்கத்தினையும் அவர் வழங்குகிறார். எனவே, ஒருங்கிணைந்திருத்தல் என்பது கம்பனியின் ஆழமாக வேரூன்றிய ஓர் எடுகோளாக இருக்கிறது. ஊழியர்கள் **திரு. பிரியந்தவை** நல்லதொரு தலைவராகப் பின்பற்றுவதுடன் அவர்மீது மகத்தான பேரன்பையும் மரியாதையையும் வைத்துள்ளனர்.

எவ்வாறாயினும், **பிரியந்த ஹோல்டிங் லிமிட்டெட்** இற்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்ட குழுமப் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), **திரு. ஒஸ்ரின் பெரேரா** ஊழியர்களுடன் வேறுபட்ட அணுகுமுறையைப் பின்பற்றுகிறார். அவர் ஆக்ரோஷமான போக்குடையவரும் இலக்கினை அடைவதையே நோக்காகக் கொண்டவரும் ஆவார். அவர் கீழ்ப் பணியாளர்களை நெருக்கமாகக் கூர்ந்து ஆராய்ந்து, சிறப்பான செயற்றிறனைக் கொண்டவர்களுக்கு வெகுமதியும் மோசமான செயற்றிறனைக் கொண்டவர்களுக்கு தண்டனையும் வழங்குபவர். கம்பனியானது சிறந்த நிதிநிலையை அடைந்துகொள்வதற்காக அவர் ஒரு புதிய வெகுமதிக் கொள்கையை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

இருப்பினும், புதிய வெகுமதிக் கொள்கை தொடர்பில் ஊழியர்கள் எவ்விதத்திலும் திருப்திகொள்ள வில்லை. புதிய வெகுமதிக் கொள்கையில், ஊழியர்களின் நிதித் தேவை பற்றி மாத்திரமே கூறப்பட்டிருக்கின்ற அதே நேரம் ஊழியர்களின் ஏனைய தேவைகள் பற்றி எவ்வித கவனமும் செலுத்தப் பட்டிருக்கவில்லை. **திரு. பிரியந்தவும்கூட** புதிய வெகுமதிக் கொள்கை பற்றி மிகவும் ஏமாற்றமடைந்ததுடன் இது நிறுவனத்தில் நிலவுகின்ற ஆரோக்கியமான வேலைச்சூழலுக்கு அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கலாம் எனவும் எண்ணுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தரப்பட்ட விடயங்களின்படி, முறையே **திரு. பிரியந்த** மற்றும் **திரு. ஒஸ்ரின்** ஆகியோரால் பின்பற்றப்படுகின்ற தலைமைத்துவப் பாணிகளை (leadership styles) **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(b) ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு **பிரியந்த ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்** இனால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஊக்கப்படுத்தல் கோட்பாடுகள் (motivational theories) இரண்டினை (02) **விபரிக்குக**. (12 புள்ளிகள்)

(c) **பிரியந்த ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்** இன் செயற்பாடுகளுக்கு நிறுவன கலாசாரம் (organizational culture) ஏன் முக்கியமானது என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |